[13th March 1964

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தத் திட்டம் அமலாக்கப்பட்டவுடன் மற்ற ஜில்லாக்களுக்கு இந்த மீன்களை சப்ளை செய்யலாம். ஆனால் ரோடு வசதிகள் சரியாக இல்லாமல் இருக்கின்றன. ரோடுகளையும் மராமத்து செய்வது இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** இந்தத் திட்டத்தில் ரோடு வசதி பற்றி இல்லை. பின்னால் வரும்போது ரோடு வசதிக் குறைவாக இருந்தால் அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய யோசிக்கலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இந்த மீன் பிடிப்புத் திட்டத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மற்ற மாவட்டங்களில் கடலோரப் பகுதியுள்ள இடங்களுக்கெல்லாம் இது விஸ்தரிக்கப்படுமா ? தென் ஆற்காடு பகுதியில் மாக்காணம் பகுதியில் குறைந்தது 30, 40 கிராமங்கள் திட்டுத் திட்டாக இருக்கின்றன ; அங்கே மீன் பிடிக்க எந்த வசதியும் இல்லை. இந்தத் திட்டத்தை அந்தப் பகுதிக்கு விஸ்தரிக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** முதலாவதாக ராமநாதபுரம் மாவட்டத்தில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதில் நல்ல பலன் கிடைத்தால் மற்ற மாவட்டங்களுக்கு இதை விஸ்தரிப்பது பற்றி ஆலோசிக்கப்படும்.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அடிப்படையில் நடத்தப்படுகிறதா ? அல்லது மாநில சர்க்கார் முழுச் செலவில் நடத்தப்படுகிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இந்தத் திட்டம் மாநில சர்க்கார், மத்திய சர்க்கார், நார்வே சர்க்கார் ஆகிய மூன்று சர்க்கார்களும் சேர்ந்து செய்வது.

*244 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முன் பணத்தொகை கட்ட வசதியில்லாத மீனவர்களுக்கு அதை வசூலிக்காமல் இயந்திரப் படகுகளைக் (டிராலோ படகுகள்) கொடுத்துதவ உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இல்லை.

* 245 கேள்வி.—**திரு. இராம அரங்கண்ணல் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ம் ஆண்டில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனியார்களுக்கும் விநியோகிக்கப்பட்ட படகுகள் எத்தனை ?

(இ) அவைகளில் எத்தனை சேதமடைந்துள்ளன ?